## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஊத்தங்கரை

**முன்னிலை: திரு.D.சரவணன், B.A.,B.L.**
**நீதித்துறை நடுவர், ஊத்தங்கரை**

**2026ம் ஆண்டு, மார்ச் மாதம் 12–ம் நாள், வியாழக்கிழமை**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 57/2018**
**CNR NO:TNKI12-000442-2018**

அரசுக்காக:–
காவல் ஆய்வாளர்,
ஊத்தங்கரை காவல் நிலையம்,
குற்ற எண்.355/2017
சட்டப்பிரிவுகள் 279, 304(A)இ.த.ச. ......குற்றமுறையிடுபவர்.

/எதிர்/

சத்தியமூர்த்தி த/பெ.அதியமான் .....குற்றஞ்சாட்டப்பட்டவர்.

இவ்வழக்கு 18.05.2018 அன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை – 1 திருமதி.R. டீனா அவர்களும் எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. P.ராஜிவ்காந்தி அவர்கள் முன்னிலையாகி நடத்திட இரு தரப்பு வாதுரைக் கேட்கப்பட்டு, சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் கவனமாக பரிசீலிக்கப்பட்டு, நன்கு ஆராய்ந்த பின்னர் இன்று, இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கிடும்.

### தீர்ப்புரை

கடந்த 02.08.2017 ம் தேதி மாலை சுமார் 5.10 மணியளவில் ஊத்தங்கரை–திருப்பத்தூர் செல்லும் மாநில நெடுஞ்சாலையில் பாண்டவர்நகர் பிரிவு ரோட்டிடம் இறந்துபோன தேவராஜன் என்பவர்

ஊத்தங்கரையில் சொந்தவேலையை முடித்துவிட்டு ஊருக்கு திரும்பி செல்லவேண்டி அவருக்கு சொந்தமான இருசக்கர வாகனம் YAMAHA CRUX TN 24 P 1128 ல் திருப்பத்தூர் நோக்கி சென்று கொண்டிருக்கும்போது அவருக்கு முன்னால் TVS SPORT TN 24 J 8771 என்ற இருசக்கர வாகனத்தை ஓட்டி சென்ற எதிரி கையை காட்டி எவ்வித சைகையும், இன்டிகேட்டரும் போடாமல் கவனக்குறைவாகவும், அஜாக்கிரதையாகவும் திடீரென ரோட்டின் இடது புறத்திலிருந்து வலதுபுறமாக பாண்டவநகர் பிரிவு ரோட்டிற்கு செல்லவேண்டி திரும்பியும், எதிரி ஏற்படுத்திய விபத்தில் தேவராஜனுக்கு தலையில் பலத்தகாயம் ஏற்பட்டு அதனால் மரணத்தை உண்டாக்கியதாகவும் எதிரி மீது ஊத்தங்கரை காவல் ஆய்வாளர் இ.த.ச. பிரிவுகள் 279, 304(A)ன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. இவ்வழக்கில் எதிரி முன்னிலையானதும், எதிரிக்கு அரசுத்தரப்பு வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச. 207 பிரிவின் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

3. எதிரிக்கு நகல்கள் வழங்கிய பின்பு, எதிரியிடம் குற்றம் பற்றி வினவிய போது, எதிரி குற்றத்தை மறுத்து குற்றவாளி இல்லை என்றார். இருதரப்பும் கேட்டும் வழக்காவணங்களைப் பரிசீலனை செய்தும், எதிரி மீது குற்றச்சாட்டுகள் வனைய முதல் நோக்கில் போதுமான ஆரம்ப ஆதாரங்கள் இருந்ததால், எதிரி மீது 279, 304(A) இ.த.ச.—ன் படியும், குற்றச்சாட்டுகள் வனைந்து படித்துக் காட்டி விளக்கி கூறி கேள்வி கேட்டபோது, எதிரி மீண்டும் குற்றங்களை மறுத்து குற்றவாளி இல்லை என்றார்கள்.

4. இவ்வழக்கில் அரசுத்தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.8வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ11 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்:-**

5. கடந்த 02.08.2017 ம் தேதி மாலை சுமார் 5.10 மணியளவில் ஊத்தங்கரை-திருப்பத்தூர் செல்லும் மாநில நெடுஞ்சாலையில் பாண்டவர்நகர் பிரிவு ரோட்டிடம் இறந்துபோன தேவராஜன் என்பவர் ஊத்தங்கரையில் சொந்தவேலையை முடித்துவிட்டு ஊருக்கு திரும்பி செல்லவேண்டி அவருக்கு சொந்தமான இருசக்கர வாகனம் YAMAHA CRUX TN 24 P 1128 ல் திருப்பத்தூர் நோக்கி சென்று கொண்டிருக்கும்போது அவருக்கு முன்னால் TVS SPORT TN 24 J 8771 என்ற இருசக்கர வாகனத்தை ஓட்டி சென்ற எதிரி கையை காட்டி எவ்வித சைகையும், இன்டிகேட்டரும் போடாமல் கவனக்குறைவாகவும், அஜாக்கிரதையாகவும் திடீரென ரோட்டின் இடது புறத்திலிருந்து வலதுபுறமாக பாண்டவநகர் பிரிவு ரோட்டிற்கு செல்லவேண்டி திரும்பியும், எதிரி ஏற்படுத்திய விபத்தில் தேவராஜனுக்கு தலையில் பலத்தகாயம் ஏற்பட்டு அதனால் மரணத்தை உண்டாக்கியதாகவும் காவல் ஆய்வாளர் அ.சா.8 இராமமூர்த்தி கடந்த 5.08.2017 ம் தேதி தன்னுடன் பணியில் இருந்த சிறப்பு உதவி ஆய்வாளர் திரு ராதாகிருஷ்ணன் என்பவர் வாதி பூபதி என்பவர் கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று நிலையே குற்ற எண் 355/2017 சட்டப்பிரிவுகள் 279, 337 இதச படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். வழக்கில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், 06.08.2017 ம் தேதி காலை 7.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் நந்தகோபால் மற்றும் ராஜா ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தும் மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றும், பின்பு சாட்சிகள் பூபதி அலமேலு சதீஷ்குமார் சுப்ரமணி மகஜர் சாட்சிகள் நந்தகோபால் மற்றும் ராஜா

ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும், 07.08.2017 ம் தேதி வழக்கில் காயம் அடைந்த தேவராஜ் என்பவர் சிகிச்சை பலனளிக்காமல் சேலம் அரசு மருத்துவமனையில் இறந்து விட்டதால் இவ்வழக்கினை சட்டப்பிரிவினை இதச பிரிவுகள் 297, 337 ல் இருந்து இதச பிரிவுகள் 297, 304(A) ஆக பிரிவு மாற்றம் செய்து வழக்கு கோபினை தனது பார்வைக்கு வைத்தும் தான் வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 08.08.2017 ம் தேதி காலை 6.00 மணிக்கு ஊத்தங்கரையிலிருந்து சேலம் அரசு மருத்துவமனை சென்று காலை 8 மணிக்கு சவக்கிடங்கின் முன்பு பஞ்சாயத்தர்கள் முன்னிலையில் தேவராஜ் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை மேற்கொண்டும் பின்னர் சாட்சிகள் பூபதி அலமேலு சுப்ரமணி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும், பின்பு மேற்படி திரு தேவராஜ் என்பவரின் பிரேதத்தை பிரேத விசாரணை செய்வதற்காக பிரேத பரிசோதனை செய்வதற்காக மருத்துவருக்கு வேண்டுகோள் கடிதம் தலைமைக்காவலர் 942. சத்தியமூர்த்தி மூலம் கொடுத்து பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தும், பின்னர் பிரேத பரிசோதனை முடிந்த பிறகு தேவராஜன் உடலை உறவினர்களிடம் ஒப்படைத்தும், இவ்வழக்கில் விபத்து ஏற்படுத்திய மற்றும் விபத்துக்குள்ளான வாகனங்களை மோட்டார் வாகன ஆய்வாளரின் பரிசோதனைக்காக அனுப்பி வைத்தும், மோட்டார் வாகன ஆய்வாளரை விசாரித்தும் அவரிடம் பரிசோதனை ஆய்வு அறிக்கையை பெற்றும், பிரேத பரிசோதனை செய்த மருத்துவரிடம் பிரேத பரிசோதனை அறிக்கை பெற்று அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும் பின்னர் இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரிக்கு எதிராக இதச பிரிவுகள் 279, 304(A) ஆகியவற்றின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் அரசு தரப்பில் உள்ளது.

<u>**அரசுத்தரப்பு சாட்சிகள்:-**</u>

6. அரசுத்தரப்பில் அ.சா.1 பூபதி புகார்தாரர் மற்றும் காயம்பட்டவரின் உறவினர் ஆவார். அ.சா.1 பூபதி சம்பவம் பற்றியும் போன்மூலம் தகவல் தெரிந்து தானும் காயம்பட்டவரின் மனைவியும் ஊத்தங்கரை மருத்துவமனை சென்று பார்த்தது பற்றியும் விபத்து ஏற்படுத்திய ஓட்டுநர் மீது நடவடிக்கை எடுக்குமாறு எழுத்துமூலமான புகார் கொடுத்தது பற்றியும் கூறும் சாட்சியாக விசாரிக்கப்பட்டு அவர் மூலம் புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அ.சா.2 அலமேலு என்பவர் காயமடைந்த தேவராஜின் மனைவி. இவர் சம்பவம் நடைபெற்றதை பற்றி போன் மூலம் தகவல் தெரிந்து மருத்துவமனை சென்றது பற்றியும் தனது கணவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டது பற்றியும், தனது கணவரின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை மேற்கொண்டது பற்றியும் கூறும் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.3 சுப்பிரமணி காயம்பட்ட தேவராஜின் உறவினர் ஆவார். சம்பவம் நடைபெற்றதை பற்றி போன் மூலம் தகவல் தெரிந்தது பற்றியும் தேவராஜின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை மேற்கொண்டபோது உடனிருந்தது பற்றியும் கூறும் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.4 மந்திரி காயம்பட்ட தேவராஜின் உறவினர் ஆவார். சம்பவம் நடைபெற்றதை பற்றி போன் மூலம் தகவல் தெரிந்தது பற்றியும் தேவராஜின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை மேற்கொண்டபோது உடனிருந்தது பற்றியும் கூறும் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.5 சதிஷ்குமார் இவர் சம்பவம் நடைபெற்ற தகவல் தெரிந்தது பற்றியும் தேவராஜிக்கு ஏற்பட்ட காயங்கள் பற்றியும், சிகிச்சையில் சேர்த்தது பற்றியும் கூறும் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.6 நந்தகோபால் சம்பவத்தை கேள்விப்பட்டது பற்றியும்

பார்வைமகஜரில் சாட்சிகளாக கையொப்பம் செய்தது பற்றியும் கூறும் சாட்சியாக விசாரிக்கப்பட்டு அவர் மூலம் பார்வைமகஜரிலுள்ள முதலாவது கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அ.சா.7 ராஜா சம்பவத்தை கேள்விப்பட்டது பற்றியும் பார்வைமகஜரில் சாட்சிகளாக கையொப்பம் செய்தது பற்றியும் கூறும் சாட்சியாக விசாரிக்கப்பட்டு அவர் மூலம் பார்வைமகஜரிலுள்ள இரண்டாவது கையொப்பம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.அ.சா.8 (காவல் ஆய்வாளர்) இராமமூர்த்தி புலன் விசாரணை அதிகாரியாக விசாரிக்கப்பட்டு சம்பவயிடம் சென்று சம்பவத்தை பார்வையிட்டு வழக்கில் இறந்துபோன தேவராஜின் பிரேதத்தை பிரேத விசாரணை முடித்து பிரேத பரிசோதனைக்கு அனுப்பியது பற்றியும் பிரேத விசாரணை சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தது பற்றியும் இவ்வழக்கின் புலன்விசாரணை முடித்து எதிரிமீது நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தது பற்றியும் அவர் மூலம் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆகவும், மாதிரிவரைபடம் அ.சா.ஆ5 ஆகவும், பார்வைமகஜர் அ.சா.ஆ.6 ஆகவும், சட்டப்பிரிவுமாறுதல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆகவும், பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.8 ஆகவும், TN 24 J 8771 இருசக்க வாகன மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ. 9 ஆகவும், விபத்துக்குள்ளான TN 24 P 1128 இருசக்கர வாகன மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.10 ஆகவும், பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.11 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**<u>எதிரி கு.வி.மு.ச. 313 (1) (ஆ) பிரிவின் கீழ் வினவுதல்:–</u>**

7. இவ்வழக்கில் அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரிக்கு எதிராக அமைந்துள்ள சாட்சியங்கள் குறித்து கு.வி.மு.ச. 313 (1) (ஆ) பிரிவின் கீழ் வினவிய போது, அவற்றை எதிரி மறுத்துள்ளார். எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சி இல்லை என்று கூறப்பட்டுள்ளது. இருதரப்பும்

கேட்கப்பட்டது.

**ஆய்வுக்குரிய பிரச்சினை:–**

8. இவ்வழக்கில் அரசுத்தரப்பில் எதிரி மீதான சட்டப்பிரிவு 279, 304(A) இ.த.ச. பிரிவுகளின் படியான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

**வாதுரைகள்:–**

9. அரசுத்தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடுகையில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் அனைவரும் எவ்வித முரண்பாடுகளும் இன்றி தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும், எனவே எதிரியை தண்டிக்க வேண்டுமென்று வாதிட்டார்.

10. எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடும் போது அரசுத்தரப்பு வழக்கு பொய் வழக்கு என்றும், வேண்டுமென்றே ஜோடிக்கப்பட்ட வழக்கு என்றும், எனவே அரசுத்தரப்பில் எதிரி மீதான குற்றச் செயல்கள் நிரூபிக்கப்படாததால், எதிரியை விடுதலை செய்ய வேண்டுமென்று வாதிட்டார்.

**சாட்சியங்களின் மதிப்பீட்டல்:–**

11. இவ்வழக்கில் அரசு தரப்பில் 13 சாட்சிகள் பட்டியலிடப்பட்டு 8 சாட்சிகள் அரசுத்தரப்பில் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ளனர். இவ்வழக்கில் சம்பவம் குறித்து புகார்கொடுத்த அ.சா.1 பூபதி தனது முதல் விசாரணை சாட்சியத்தில் கடந்த 02.08.2017 ம் தேதி தேவேந்திரன் என்பவர் சாலையில் இருசக்கர வாகனத்தில் சென்றபோது பாண்டவர் நகர் அருகே மாலை சுமார் 5 மணிக்கு பின்னால் இருசக்கர வாகனத்தில் வந்தவர் தேவேந்திரன் ஓட்டி வந்த வாகனத்தின் மீது மோதியதால் வலது பக்க தோள் பட்டை, தலை ஆகிய இடங்களில் அடிப்பட்டிருப்பதாக சதீஷ்

என்பவர் போன் மூலம் தனக்கு தகவல் சொன்னார் என்றும், தான் ஊத்தங்கரை அரசு மருத்துவமனைக்கு சென்று தேவேந்திரனை பார்த்தேன் என்றும் அங்கு அவர்பேச முடியாத நிலையில் இருந்தார் என்றும், மேல்சிகிச்சைக்காக தருமபுரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றும், அங்கிருந்து மீண்டும் சேலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றும், அங்கு 5 நாள் சிகிச்சைக்கு பிறகு இறந்துவிட்டார் என்றும், இது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றும், தன்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1 புகாரிலுள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும் போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளித்துள்ளார்.

12. அ.சா. 1 பூபதி எதிரி தரப்பு குறுக்குவிசாரணையில் தனக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால் ஓரளவுக்கு தெரியும் என்றும், போலீசார் தன்னை விசாரிக்கும்போது தான் தன் முதல் விசாரணையில் மேற்சொன்ன சங்கதிகள் தான் சொன்னேன் என்றால் சரிதான் என்றும் புகாரை யார் எழுதினார்கள் என்றால் காவல் நிலையத்தில் இருந்த போலீசார் எழுதினார் என்றும் புகாரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் தனக்கு தெரியாது என்றால் சரிதான் என்றும் விபத்தை தான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான் என்றும் சாட்சியம் அளித்திருப்பதால் அ.சா.1 பூபதியின் சாட்சியம் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக இல்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் அ.சா.1 பூபதி தனது முதல் விசாரணையில் புகாரிலுள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்று சாட்சியம் அளித்திருந்தாலும் தனது குறுக்குவிசாரணையில் புகாரை காவல்நிலையத்தில் இருந்த போலீசார் எழுதினார்கள் என்றும்

புகாரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் தனக்கு தெரியாது என்றும் சாட்சியம் அளித்திருப்பது அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக இல்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

13. இவ்வழக்கில் கேள்வியுற்ற சாட்சியாக அ.சா.2 அலமேலு விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.2 அலமேலு தனது முதல் விசாரணை சாட்சியத்தில் 02.08.2017 ம் தேதி காலை 5.00 மணிக்கு தான் வீட்டில் இருந்தபோது தனது கணவர் போனில் இருந்து ஒருவர் தனக்கு போன் செய்து தனது கணவர் அடிப்பட்டு கிடப்பதாக தகவல் சொன்னார் என்றும் தான் சம்பவயிடத்திற்கு செல்வதற்குள் தனது கணவரை ஊத்தங்கரை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று விட்டதால் தான் அங்கு வந்து பார்த்தேன் என்றும், அவருக்கு வலது தோள்பட்டை, தலை, கால் ஆகிய இடங்களில் அடிப்பட்டிருந்தது என்றும் அவர் பேச முடியாத நிலையில் இருந்தார் என்றும் மேல் சிசிச்சைக்காக தருமபுரி அரசு மருத்துவ மனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றும், 3 நாட்கள் கழித்து அ.சா.1 பூபதியை காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்குமாறு கூறினேன் என்றும், சிகிச்சையில் இருந்த கணவர் 6 நாட்கள் கழித்து இறந்துவிட்டார் என்றும் இறந்துவிட்ட தன் கணவரை பிரேத பரிசோதனை செய்து தன்னிடம் ஒப்படைத்தார்கள் என்றும் வழக்கு சம்மந்தமாக போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 அலமேலுவின் சாட்சியம் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக உள்ளது.

14. எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்பட்டபோது அ.சா.2 அலமேலு விபத்து சம்மந்தமாக தான் எதுவும் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான் என்றும், தான் இந்த விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான் என்றும் சாட்சியம் அளித்திருப்பதால் அ.சா.2 அலமேலுவின் சாட்சியம் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக இல்லை என

இந்நீதிமன்றம் கருதுகிறது.

15. இவ்வழக்கின் மற்றொரு கேள்வியுற்ற சாட்சியான அ.சா.3 சுப்பிரமணி தனது முதல்விசாரணை சாட்சியத்தில் 02.08.2017 ம் வருடம் தேவன் என்கிற தேவராஜ் என்பவர் இருசக்கர வாகனத்தில் கோயில் ஆடு வாங்குவதற்காக கொட்டாவூர் சென்று விட்டு திரும்பி வரும்போது பாண்டவர் நகர் அருகே மாலை 5.30 மணிக்கு விபத்து நடந்ததாக போன் மூலம் தங்களுக்கு தகவல் வந்தது என்றும் தான் ஊத்தங்கரை அரசு மருத்துவமனையில் வந்து பார்த்தேன் என்றும், அவருக்கு வலது தோள்பட்டை, தலை ஆகிய இடங்களில் அடிப்பட்டு இருந்து அவர் பேச முடியாத நிலையில் இருந்தார் என்றும், இது சம்மந்தமாக அ.சா.1 புகார் கொடுத்தார் என்றும் 3 நாள் கழித்து தருமபுரி அரசு மருத்துவ மனையில் இறந்துவிட்டார் என்றும் போலீஸ் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.3 சுப்பிரமணியின் சாட்சியம் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக உள்ளது.

16. அ.சா.3 சுப்பிரமணி எதிரி தரப்பு குறுக்குவிசாரணையில் தான் இந்த விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான் என்றும் தான் விபத்து நடந்த பிறகு எப்போது தேவேந்திரனை பார்த்தேன் என்றால் மாலை சுமார் 5.30 மணிக்கு பார்த்தேன் என்றும் இந்த விபத்து யாருடைய அஜாக்கிரதையால் ஏற்பட்டது என்று தனக்கு தெரியாது என்றால் சரிதான் என்றும் சாட்சியம் அளித்திருப்பதால் அ.சா.3 சுப்பிரமணியின் சாட்சியம் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக இல்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

17. இவ்வழக்கின் பிரேத விசாரணை சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.4 மந்திரி தனது முதல் விசாரணை சாட்சியத்தில் சுமார் 5−6

ஆண்டுகளுக்கு முன்பு தான் சூளகிரியில் இருந்தபோது தனது உறவினர்கள் தனக்கு போன் செய்து தனது அண்ணன் மகன் தேவராஜ் அவருடைய இருச்சக்கர வாகனத்தில் ஊத்தங்கரையிலிருந்து வீட்டிற்கு சென்று கொண்டிருந்தபோது விபத்து நடந்ததாக தகவல் சொன்னார்கள் என்றும் தான் ஊத்தங்கரை அரசு மருத்துவமனையில் தேவராஜை வந்து பார்த்தேன் என்றும், அவருக்கு உடல் முழுவதும் அடிப்பட்டு இருந்தது என்றும் மேல்சிகிச்சைக்காக தருமபுரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றும் அங்கிருந்து மேல்சிகிச்சைக்கு சேலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றும் சுமார் 4-5 நாள் சிகிச்சையில் இருந்த பின்பு இறந்து விட்டார் என்றும் அங்கேயே பிரேத பரிசோதனை செய்து பிரேதத்தை ஒப்படைத்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.4 மந்திரியின் சாட்சியம் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக உள்ளது. எதிரி தரப்பு குறுக்குவிசாரணையில் விபத்து எவ்வாறு நடந்தது என்று தனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான் என்றும் சாட்சியம் அளித்திருப்பதால் அ.சா.4 மந்திரியின் சாட்சியம் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

18. இவ்வழக்கின் கேள்வியுற்ற சாட்சியான அ.சா.5 சதீஸ்குமார் தனது முதல் விசாரணை சாட்சியத்தில் சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்பு தேவராஜ் மனைவி அலமேலு என்பவர் தனக்கு போன் மூலம் தொடர்பு கொண்டு தனது கணவர் தேவராஜ்க்கு விபத்து ஏற்பட்டு அடிப்பட்டதாக தன்னை அழைத்தார்கள் என்றும், தானும் அலமேலுவும் சம்பவயிடத்திற்கு வருவதற்குள் ஊத்தங்கரை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றுவிட்டதாக அங்கிருந்தவர்கள் சொன்னார்கள் என்றும், சம்பவம் திருப்பத்தூர் ரோட்டில் பாண்டவர் நகரில் நடந்தது என்றும், தேவராஜை

தான் மருத்துவமனையில் பார்த்தபோது அவருக்கு தலை மற்றும் தோள்பட்டையில் அடிப்பட்டிருந்தது என்றும் மேல் சிகிச்சைக்காக தருமபுரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றும் சுமார் 3 நாட்கள் கழித்து தேவராஜ் இறந்துவிட்டதாக தகவல் சொன்னார்கள் என்றும் போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.5 சதீஸ்குமாரின் சாட்சியம் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக உள்ளது.

19. அ.சா.5 சதீஸ்குமார் எதிரி தரப்பு குறுக்குவிசாரணையில் விபத்து எவ்வாறு நடந்தது என்று தனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான் என்றும் சாட்சியம் அளித்திருப்பதால் அ.சா.5 சதீஸ்குமாரின் சாட்சியம் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக இல்லை என் இந்நீதிமன்றம் கருதுகிறது.

20. இவ்வழக்கின் பார்வைமகஜர் சாட்சியான அ.சா.6 நந்தகோபால் தனது முதல் விசாரணை சாட்சியத்தில் சுமார் 8 வருடங்களுக்கு முன்பாக விபத்து நடைபெற்றதாக போலீசார் சம்பவயிடம் வந்து தன்னிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றும் அதில் படம் வரைந்தார்கள் என்றும் தன்னிடம் எழுதாத வெற்று பேப்பரில் கையொப்பம் வாங்கினார்கள் என்றும் வழக்கு சம்மந்தமாக போலீசார் விசாரித்தார்கள் என்றும் தன்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.2 பார்வைமகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் தன்னுடையது தான் என்றும் பிறழ்சாட்சியம் அளித்துள்ளார்

21. இவ்வழக்கின் மற்றொரு பார்வைமகஜர் சாட்சியான அ.சா.7 ராஜா தனது முதல் விசாரணை சாட்சியத்தில் சுமார் 8 வருடங்களுக்கு முன்பாக தான் பாண்டவர் நகரில் இருந்தபோது போலீசார் விபத்து நடந்தது சம்பந்தமாக தன்னிடம் விசாரித்து கையொப்பம் வாங்கினார்கள் போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் பிறழ்சாட்சியம் அளித்துள்ளார்.

22. இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரியான அ.சா.8 இராமமூர்த்தி தனது முதல் விசாரணை சாட்சியத்தில் கடந்த 5.08.2017 ம் தேதி என்னுடன் பணியில் இருந்த சிறப்பு உதவி ஆய்வாளர் திரு ராதாகிருஷ்ணன் என்பவர் அ.சா.1 பூபதி என்பவர் கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று நிலையே குற்ற எண் 355/2017 சட்டப்பிரிவுகள் 279, 337 இதச படி அ.சா.ஆ.4 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தும், பின்னர் முதல் தகவலை அருகே நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், 06.08.2017 ம் தேதி காலை 7.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் நந்தகோபால் மற்றும் ராஜா ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.5 பார்வைமகஜர் மற்றும் அ.சா.ஆ.6 மாதிரி வரைபடம் தயார் செய்தும் பின்பு சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும், மேற்படி பார்வை மகஜர், மாதிரி வரைபடம் மற்றும் வாக்குமூலங்களை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும் 07.08.2017 ம் தேதி வழக்கில் காயம் அடைந்த தேவராஜ் என்பவர் சிகிச்சை பலனளிக்காமல் சேலம் அரசு மருத்துவமனையில் இறந்து விட்டதால் இவ்வழக்கினை சட்டப்பிரிவினை இதச பிரிவுகள் 279, 337 ல் இருந்து இதச பிரிவுகள் 297, 304(A) ஆக அ.சா.ஆ.8 சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை செய்து வழக்கு கோபினை தனது பார்வைக்கு வைத்தும் நான் வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 08.08.2017 ம் தேதி காலை 6.00 மணிக்கு ஊத்தங்கரை ஊத்தங்கரையிலிருந்து சேலம் அரசு மருத்துவமனை சென்று காலை 8 மணிக்கு சவக்கிடங்கின் முன்பு பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் தேவராஜ் பிரேதத்தின் மீது அ.சா.ஆ.8 பிரேத விசாரணை அறிக்கை மேற்கொண்டும் பின்னர் சாட்சிகள் பூபதி அலமேலு சுப்ரமணி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு

செய்தும், பின்பு மேற்படி திரு தேவராஜ் என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்வதற்காக மருத்துவருக்கு வேண்டுகோள் கடிதம் தலைமைக்காவலர் 942. சத்தியமூர்த்தி மூலம் கொடுத்து பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தும், பின்னர் பிரேத பரிசோதனை முடிந்த பிறகு தேவராஜன் உடலை உறவினர்களிடம் ஒப்படைத்தும், இவ்வழக்கில் விபத்து ஏற்படுத்திய மற்றும் விபத்துக்குள்ளான வாகனங்களை மோட்டார் வாகன ஆய்வாளரின் பரிசோதனைக்காக அனுப்பி வைத்தும், மோட்டார் வாகன ஆய்வாளரை விசாரித்து அவரிடம் பரிசோதனை ஆய்வு அறிக்கையை பெற்றும் அ.சா.ஆ.9 TN 24 J 8771 இருசக்க வாகன மோட்டார் வாகன ஆய்வறிக்கை மற்றும் அ.சா.ஆ.10 விபத்துக்குள்ளான TN 24 P 1128 இருசக்கர வாகன மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்றும் வழக்கில் பிரேத பரிசோதனை செய்த மருத்துவரிடம் அ.சா.ஆ.11 பிரேத பரிசோதனை அறிக்கை பெற்று அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும் பின்னர் இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரிக்கு எதிராக இதச பிரிவுகள் 279, 304(A) ஆகியவற்றின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

**<u>23. Section 279 I.P.C – Rash driving or riding on a public way</u>**

Whoever drives any vehicle or rides on any public way in a manner so rash or negligent as to endanger human life or to be likely to cause hurt or injury to any other person.

<u>எதிரிக்கெதிராக இவ்வழக்கில் இ.த.ச பிரிவு 279–ன் படியான குற்றம் நிரூபிக்கப்பட்டுள்ளதா ?</u>

இவ்வழக்கில் அரசுத்தரப்பு சாட்சிகள் எதிரி தான் வாகனத்தை வேகமாக ஓட்டி வந்தார் என்று சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை.

எனவே, எதிரி மீதான இ.த.ச. பிரிவு 279–ன் படியான குற்றம் அரசுத்தரப்பால் நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**24. Section 304(A) I.P.C – Causing death by negligence**

Whoever causes the death of any person by doing any rash or negligent act not amounting to culpable homicide.

எதிரிக்கெதிராக இவ்வழக்கில் இ.த.ச பிரிவு 304(A)–ன் படியான குற்றம் நிரூபிக்கப்பட்டுள்ளதா ?

25. இவ்வழக்கில் அரசு தரப்பால் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் யாரும் விபத்து ஏற்படுத்திய வாகனம் குறித்து எதுவும் சாட்சியம் அளிக்கவில்லை. இவ்வழக்கில் எதிரி குறித்து எந்த வித சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. விபத்து ஏற்படுத்தியவாகனம் அஜாக்கிரதையாகவும், வேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டப்பட்டது என்பது குறித்து எந்த ஒரு சாட்சியும் சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படாததாலும், பார்வைமகஜர் சாட்சிகள் பிறழ்சாட்சியாக மாறியுள்ளதாலும் இவ்வழக்கில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட அரசு தரப்பு சாட்சிகள் சம்பவத்தை நேரில் பார்த்ததாகவோ, விபத்து எவ்வாறு ஏற்பட்டது என்பது குறித்து சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை.

26. முடிவாக, எதிரியை 279, 304(A) இ.த.ச. பிரிவுகளின் படி குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து, எதிரியை கு.வி.மு.ச. 255(1) பிரிவின் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. எதிரியிடமிருந்து பெற்ற பிணையமானது மேல் முறையீட்டுக் காலத்திற்கு பின்னிட்டு தானாகவே ரத்தாகிவிடும் என உத்தரவிடப்படுகிறது.

27. இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படவில்லை. எனவே இது குறித்து உத்தரவு எதுவும்

பிறப்பிக்கப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் திருத்தி சரிபார்க்கப்பட்டு 2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 12–ம் நாள் என்னால் திறந்த இந்த நீதிமன்ற அவையில் அவையறிய பகரப்பட்டது.

D SARAVANAN
Judicial Magistrate
Digitally signed by D SARAVANAN
Location: Uthangarai

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
ஊத்தங்கரை

**<u>அரசுத்தரப்பு சாட்சிகள்:–</u>**

1) அ.சா.1 - திரு. பூபதி
2) அ.சா.2 - திருமதி. அலமேலு
3) அ.சா.3 - திரு. சுப்பிரமணி
4) அ.சா.4 - திரு. மந்திரி
5) அ.சா.5 - திரு. சதீஸ்குமார்
6) அ.சா.6 - திரு.நந்தகோபால்
7) அ.சா.7 திரு.ராஜா
8) அ.சா.8 திரு.ராமமூர்த்தி(காவல் ஆய்வாளர்)

**<u>அரசுத்தரப்பு சான்றாவணங்கள்:–</u>**

1) அ.சா.ஆ.1 - புகார்
2) அ.சா.ஆ.2 - பார்வைமகஜரிலுள்ள அ.சா.6ன் முதலாவது கையொப்பம்
3) அ.சா.ஆ.3 - பார்வைமகஜரிலுள்ள அ.சா.7ன் இரண்டாவது

கையொப்பம்

4) அ.சா.ஆ.4 - முதல் தகவல் அறிக்கை

5) அ.சா.ஆ.5 - மாதிரிவரைபடம்

6) அ.சா.ஆ.6 - பார்வைமகஜர்

7) அ.சா.ஆ.7 - சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை

8) அ.சா.ஆ.8 - பிரேத விசாரணை அறிக்கை

9) அ.சா.ஆ.9 - TN 24 J 8771 இருசக்க வாகன மோட்டார் வாகன ஆய்வறிக்கை

10) அ.சா.ஆ.10 - TN 24 P 1128 இருசக்கர வாகன மோட்டார் வாகன ஆய்வறிக்கை

11) அ.சா.ஆ.11 - பிரேத பரிசோதனை அறிக்கை

**எதிரி தரப்பு சாட்சி :–** இல்லை

**எதிரி தரப்பு சான்றாவணம்:–** இல்லை

D SARAVANAN

Judicial Magistrate
Digitally signed by D SARAVANAN
Location: Uthangarai

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
ஊத்தங்கரை

**பின்குறிப்பு:–**

1. எதிரி பிணையில் இருந்து முன்னிலையானார்.

2. எந்த சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தப்படவில்லை.

3. வழக்கு முடிவு குறித்து காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

**நகல்:**

கிருஷ்ணகிரி மாண்பமை தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.